**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC NO. 7/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W-8 |
| Name | : | அருண்கிருஷ்ணா, வயது 38 |
| Father Name/Husband Name | : | பழனியாண்டி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of March 2024.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

__முதல் விசாரணை__

1. நான் தற்போது கோவில்பட்டி அரசு மருத்துமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.08.2022 ம் தேதி இரவு 07.45 மணியளவில் நான் பணியில் இருந்த போது சண்முகராஜ் என்பவரை அஜித்குமார் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவரை விசாரித்ததில் அன்றைய தினம் 07.15 மணியளவில் பஸ்ஸில் பயணம் செய்த போது காலாங்கரைபட்டி அருகே போய் கொண்டிருந்த போது தானாக கீழே விழுந்ததாக கூறினார்.
2. அவரை பரிசோதனை செய்த போது அவர் சுயநினைவுடன் இல்லை. அவரது சுவாசத்தில் மது வாடை இருந்தது. அவருக்கு உயர் இரத்த அழுத்தம் இருந்தது. அவரது கரு விழிகள் ஒளிக்கு சோர்வாகவே இருந்தது. தலையின் பின்பகுதியில் உராய்வு காயம் காணப்பட்டது.
3. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து தலையில் காயம் இருந்ததால் மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். **காயம்பட்ட நபருக்கு விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

__எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை__

1. காயம்பட்ட நபரை லட்சுமணபெருமாள் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்ததாக அ.சா.ஆ.4 ல் துலங்காது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் பேருந்தில் அமர்ந்து பயணம் செய்யும் போது விபத்து

ஏற்பட்டதாக உங்களிடம் சொல்லவில்லை என்றால் பேருந்தில் இருந்து விழுந்ததாக மட்டும் தான் சொன்னார்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.